## கீழடி அருகே கொந்தகையில் 15 முதுமக்கள் தாழிகள் கண்டெடுப்பு



**திருப்புவனம்:** சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கொந்தகையில் 15 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன.

திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் 9-ம் கட்ட அகழாய்வுப் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏப்ரல் 6-ம் தேதி தொடங்கி வைத்தார். இங்கு 4 குழிகள் தோண்டப்பட்டன. இதில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பானை ஓடுகள், சேதமடைந்த பானைகள், மரக்கரி துகள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து, கொந்தகையில் நடைபெற்ற அகழாய்வுப் பணியில், ஒரே இடத்தில் 15 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. 2 அடியிலேயே தென்பட தொடங்கிய நிலையில், முழுமையாக தோண்டிய பின்னர் முதுமக்கள் தாழிகள் திறக்கப்படும், என தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

இதனிடையே, கீழடி 9-ம் கட்ட அகழாய்வுப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

**வாகனங்களில் பொருத்தும் வகையில் காற்று மாசுபாட்டைக் கண்டறியும் கருவி: ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு**



**சென்னை:** வாகனங்களில் பொருத்தும் வகையிலான காற்றுமாசுபாட்டைக் கண்டறியும் கருவியை சென்னை ஐஐடியை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் சில மீட்டர் தூரத்தில் கூட காற்றின் தரம் மாறக் கூடும். எனவே, காற்றின் தரத்தை ஒரே இடத்திலிருந்து கண்காணிப்பது சாத்தியமற்றது. எனவே, வாகனங்களில் பொருத்தும் வகையில் காற்று மாசுபாட்டைக் கண்டறியும் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதை சென்னை ஐஐடி பேராசிரியர் ரகுநாதன் ரங்கசாமி தலைமையில் செயல்பட்ட ஆராய்ச்சியாளர் குழு உருவாக்கியுள்ளது. இந்திய அளவில் காற்றின் தரத்தைக் கண்டறிதல், காற்றின் தரம் குறித்து மக்களிடையே எடுத்துரைத்தல், தரவுகளைச் சேகரித்தல் உள்ளிட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவியை இருசக்கர வாகனம் உள்ளிட்டஅனைத்து வாகனங்களிலும் பொருத்திக் கொள்ளலாம். இது காற்றின் தரத்தை அளவீடு செய்வதுடன், சல்பர் ஆக்ஸைடு, நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்களின் அளவையும்,

புற ஊதாக் கதிர் அளவையும், சாலைகளின் தடிமன் போன்றவற்றையும் சோதனை செய்யும் திறன் கொண்டதாக இருக்கிறது.

இதில் இடம்பெற்றுள்ள ஜிபிஎஸ், ஜிபிஆர்எஸ் போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் தரவுகளைச் சேகரித்து அனுப்பவும் முடியும். இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை ஆய்விதழிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஐஐடி வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்**




சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, உதயநிதி, மா.சுப்பிரமணியன், சென்னை மாநகர மேயர் பிரியா உள்ளிட்டோர் உடனிருந்தனர். படம்: ம.பிரபு

**சென்னை:** சென்னை கிண்டி, கிங் நிலையவளாகத்தில், ரூ.376 கோடியில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை 6.03 லட்சம் சதுரடியில், 1000 படுக்கைகளுடன் கட்டப்பட்டுள்ளது. பல்வேறு நவீன சிறப்பு வசதிகளை கொண்ட இந்த பல்நோக்கு மருத்துவமனையை நேற்று மாலை, மருத்துவர்கள், செவிலியர்கள்
உள்ளிட்ட மருத்துவப்பணியாளர்களுடன் இணைந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதன்பின், அந்த வளாகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மார்பளவு சிலை மற்றும் கல்வெட்டையும் திறந்து வைத்தார். மருத்துவமனையை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: பதினைந்தே மாதத்தில், இந்த மருத்துவமனையை கட்டியுள்ளோம். இதுதான் மிக முக்கியமான சாதனை. 2015-ம் ஆண்டு அறிவித்துவிட்டு, 2023-ம் ஆண்டு கூட, 2 -வது செங்கலை எடுத்து வைக்காத அலட்சியத்தில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை இருக்கும் நிலையில், அடிக்கல் நாட்டிய 15 மாதத்தில் கட்டிமுடித்துள்ளோம்.

மக்களுக்கு உண்மையான சேவை நோக்கத்தோடு திட்டங்களைத் தீட்டுபவர்களுக்கும் மக்களை ஏமாற்றுவதற்காக திட்டங்களை அறிவிப்பவர்களுக்குமான வேறுபாட்டை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

கருணாநிதி தனது வாழ்க்கை வரலாறான ‘நெஞ்சுக்கு நீதி’ முதல் பாகம் வெளியீட்டு விழா 1975-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி கலைவாணர் அரங்கில் நடைபெறுவதாக ஏற்பாடானது. முதல் பாகத்தை வெளியிட அன்றைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது, பெற்றுக்கொள்ள, ஆளுநர் கே.கே.ஷா வருவதாக ஒப்புக் கொண்டிருந்தார். கடைசி நேரத்தில், இப்போது நடந்திருப்பதைப் போலவே, அப்போதும் குடியரசுத் தலைவரை வரவிடாமல் சிலர் தடுத்துவிட்டார்கள்.

தமிழகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகள் செய்ய நினைக்கும்போதெல்லாம் அதற்கு ஒரு இடைஞ்சலை ஏற்படுத்தி நம்மை திசை திருப்பி நன்மைகளைத் தடுக்கப் பார்ப்பார்கள். ஆனால் நாம் திசை திரும்ப மாட்டோம். மக்கள் நலன் ஒன்றே எனது இலக்கு என்ற நேர்வழியில் பயணிப்போம்.

**வேலூரில் தங்கும் விடுதி**: வேலூர் மாவட்டத்தில் சி.எம்.சி போன்ற பல்வேறு பெரிய மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் சிகிச்சை பெற தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் இருந்து மக்கள் வருகின்றனர். இவர்களின் தங்குமிடம் இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வேலூர் அருகே சத்துவாச்சாரி உள்வட்டத்தில் உள்ள பெருமுகை என்ற கிராமத்தில் 2 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அதில் 250 படுக்கை வசதி கொண்ட 'முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதி 'கட்டப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், துரைமுருகன், எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச்செயலர் வெ.இறையன்பு, சுகாதாரத்துறை செயலர் ககன்தீப்சிங்பேடி, பொதுப்பணித்துறை செயலர் பி.சந்திர மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**ஐநா சபையில் நடைபெறும் சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களுக்கு தலைமை தாங்குகிறார் பிரதமர் மோடி**



**புதுடெல்லி**: அமெரிக்கா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கு 6 நாள் பயணமாகச் செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, ஐநா தலைமையகத்தில் வரும் 21ம் தேதி நடைபெறும் சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களுக்கு தலைமை தாங்குகிறார்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்கா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரசு முறைப் பயணமாக

பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் செல்ல இருக்கிறார். வரும் 20ம் தேதி இந்தியாவில் இருந்து புறப்படும் பிரதமர், 21ம் தேதி அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐநா தலைமையகத்தில் நடைபெறும் சர்வதேச யோகா கொண்டாட்டங்களுக்கு தலைமை தாங்குகிறார்.

அதன் பிறகு பிரதமர் மோடி, அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் செல்கிறார். வரும் 22ம் தேதி வெள்ளை மாளிகையில் பிரதமருக்கு முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது. இதனையடுத்து, அதிபர் ஜோ பைடனைச் சந்திக்கும் பிரதமர் மோடி, அவருடன் இரு தரப்பு உறவு தொடர்பாக கலந்துரையாடுகிறார். மேலும், பிரதமர் மோடியை கவுரவிக்கும் விதமாக அன்றைய தினம் அதிபர் ஜோ பைடனும், அவரது மனைவி ஜில் பைடனும் அளிக்கும் இரவு விருந்தில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

இதன் தொர்ச்சியாக, அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகிறார். இதற்கு முன்பும், இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றி இருக்கிறார். அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் இரண்டாவது முறையாக உரையாற்றும் முதல் வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமையை இதன்மூலம் மோடி பெறுகிறார்.

**கல்வான் மோதல் நினைவு தினம் - உயிரிழந்த வீரர்களுக்கு ராஜ்நாத் சிங் மரியாதை**



**புதுடெல்லி:** கல்வான் பள்ளத்தாக்கு மோதலில் வீரமரணமடைந்த வீரர்களுக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மரியாதை செலுத்தியுள்ளார்.

கிழக்கு லடாக் எல்லைப் பகுதிகளில் சீன ராணுவம் அடிக்கடி அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது. இதன்காரணமாக கடந்த 2020-ம் ஆண்டில் லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய, சீன வீரர்களிடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது.

இதில் இந்திய தரப்பில் 20 பேர் வீரமரணம் அடைந்தனர். சீன தரப்பில் 38 பேர் உயிரிழந்தனர். ஆனால் 4 பேர் மட்டுமே உயிரிழந்ததாக சீன அரசு கூறி வருகிறது.

இந்த சூழலில் கல்வான் பள்ளத்தாக்கு மோதலின் 3-வது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், "கல்வான் பள்ளத்தாக்கில் நமது நாட்டை பாதுகாக்க வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்துகிறேன். அவர்களது துணிச்சல், வீரம், தியாகம் எதிர்கால தலைமுறையினருக்கு எப்போதும் உத்வேகம் அளிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இன்றளவும் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. அங்கு 50,000 வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். கல்வான் மோதல் நினைவு தினத்தையொட்டி ராணுவ உயரதிகாரிகளின் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் லடாக்கின் லே நகரில் நேற்று நடைபெற்றது. அப்போது சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY

## அமைதி படையினருக்கு நினைவுச் சுவர்: இந்தியாவின் தீர்மானத்துக்கு ஐ.நா. ஒப்புதல்

**நியூயார்க்:** ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் ருசிரா காம் போஜ், ஐ.நா. பொதுச் சபை அரங்கில் புதன்கிழமை "ஐ.நா. அமைதிப் படையில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு நினைவு சுவர்" என்ற தலைப்பில் வரைவு தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார்.


அதில், நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலை மையகத்தில் பொருத்தமான மற்றும் முக்கியமான இடத்தில், ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றி உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு உரிய அங்கீகாரத்தை அளிக்கும் விதத்தில் அவர்களின் பெயர் பொதித்த நினைவுச் சுவரை எழுப்ப வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. சர்வதேச அளவில் அமைதிக்கான முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்கு இந்த சுவர் மிகப்பெரிய சான்றாக திகழும் என்று ருசிரா காம்போ தெரிவித்திருந்தார்.

நினைவு சுவர் எழுப்பும் தீர்மானத்துக்கு, வங்கதேசம், கனடா, சீனா, டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், இந்தோனேசியா, ஜோர்டான், நேபாளம், ருவாண்டா, அமெரிக்கா உள்ளிட்ட 18 நாடுகளும் ஆதரவு தெரிவித்தன. ஐ.நா. பொதுச் சபை இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு நினைவு சுவர் எழுப்புவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

நினைவுச் சுவரை கட்டி எழுப்புவது தொடர்பான இந்தியாவின் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு பிரதமர் மோடி நேற்று நன்றி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவில், “அமைதிக் காக்கும் பணியில் தங்களது இன்னுயிரை ஈந்த வீரர்களுக்கு புதிய நினைவுச் சுவரை அமைப்பதற்கான தீர்மானம் இந்தியாவால் தாக்கல் செய்யப்பட்டு ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்வு. இந்த தீர்மானம் சாதனை அளவாக, 190-இணை ஸ்பான்சர்ஷிப்களை பெற்றுள்ளது. அனைவரின் ஆதரவுக்கும் நன்றி" என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் அமைதிப்படையில் இந்தியா 3வது பெரிய பங்களிப்பாளராக உள்ளது. மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சைப்ரஸ், காங்கோ ஜனநாயகக் குடியரசு, உள்ளிட்ட நாடுகளில் அமைதியை நிலைநாட்டும் பணியில் 6,000 இந்திய வீரர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் அணை தகர்ப்பால் உலக அளவில் உணவுப் பாதுகாப்பில் பாதிப்பு: ஐ.நா கவலை



**கீவ்:** உக்ரைன் அணை தகர்ப்பு எதிரொலியால் உலக அளவில் உணவு பாதுகாப்பில் பாதிப்பு ஏற்படலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைன் பகுதியில் இருந்த முக்கிய அணையான கக்கோவ்காவை ரஷ்ய படைகள் குண்டு வீசி தகர்த்ததாக சில நாட்களுக்கு முன்பு குற்றம்சாட்டப்பட்டது. அணையிலிருந்து பெருமளவு தண்ணீர் வெளியேறியதால் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர். அணை தகர்ப்பு தொடர்பாக ரஷ்யா - உக்ரைன் மாறி மாறி குற்றம் சுமத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், உக்ரைன் அணை தகர்ப்பு நிகழ்வால் உலக அளவில் உணவுப் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. உதவித் தலைவர் மார்ட்டின் கிரிஃபித்ஸ் கூறும்போது, “அப்பகுதி உலகின் மையமாக இருந்தது. கிரீமியாவுக்கு மட்டும் மல்ல, உலகிற்கு மையமாக இருந்தது. உணவுப் பாதுகாப்பில் நாம் ஏற்கெனவே சிரமத்தில் இருக்கிறோம். இதன் காரணமாக உலக அளவில் உணவுப் பொருட்களின் விலை நிச்சயமாக அதிகரிக்கும்.

அடுத்த அறுவடைக்கு அறுவடை செய்வதிலும், விதைப்பதிலும் மிகப் பெரிய பிரச்சினைகளை நாம் காணப்போவது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாதது. நிச்சயம் உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதுதான் நடக்கப் போகிறது" என்று தெரிவித்தார்.

உக்ரைனின் கெர்சன் பகுதியில் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே, கடந்த 1956-ம் ஆண்டு 98 அடி உயரத்தில், 3.2 கி.மீ நீளத்தில் கக்கோவ்கா அணை கட்டப்பட்டது. இங்கு கக்கோவ்கா நீர்மின் நிலையமும் உள்ளது. கிரிமியன் தீபகற்ப பகுதி, ஜபோரிச்ஜியா அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**உலக செஸ் சாம்பியன் | 8 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற மாணவிக்கு உற்சாக வரவேற்பு**



ஜார்ஜியாவில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் 8 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் 3-வது இடம் பிடித்த சர்வாணிகாவுக்கு அரியலூர் ரயில் நிலையத்தில் நேற்று அளிக்கப்பட்ட வரவேற்பு. படம்: பெ.பாரதி

**அரியலூர்**: அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளி சரவணன்- அன்பு ரோஜா ஆகியோரது மகள் சர்வாணிகா(8). அங்குள்ள அரசு தொடக்க
பள்ளியில் 3-ம் வகுப்பு படித்து வருகிறார். செஸ் விளையாட்டில் மாவட்ட,

மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளார்.

இதனிடையே, உலக சதுரங்க கழகம் சார்பில் ஜார்ஜியா நாட்டில் ஜூன் 6 முதல் 12-ம் தேதி வரை நடைபெற்ற செஸ் போட்டியில் சர்வாணிகா பங்கேற்றார். பல்வேறு
நாடுகளிலிருந்து வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்ற நிலையில், 8 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் மொத்தம் நடைபெற்ற 11 சுற்றுகளில், 8 சுற்றுகளில் வென்று 3-ம் இடம் பிடித்து வெண்கல பதக்கம் வென்று, இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும், சொந்த ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்தநிலையில், தனது பெற்றோருடன் குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் நேற்று அரியலூர் வந்த சர்வாணிகாவுக்கு, அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலர் லெனின், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தேகனீசன், அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளி உடற்கல்வி இயக்குநர் ரவி, உடற்கல்வி ஆசிரியர் ஆர்.ரமேஷ் மற்றும் ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி உற்சாக வரவேற்பு அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து, நவம்பர் மாதம் நடைபெற உள்ள காமன்வெல்த் செஸ் விளையாட்டுப் போட்டியில் சர்வாணிகா கலந்து கொள்ள உள்ளார். முன்னதாக, விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, சென்னையில் நேற்று முன்தினம் தனது குடும்பத்தினருடன் சந்தித்து சர்வாணிகா வாழ்த்து பெற்றார்.

## உலக ஜிடிபி பங்களிப்பில் இந்தியா மூன்றாவது பெரிய நாடாக உருவெடுக்கும் - அனந்த நாகேஸ்வரன் நம்பிக்கை



அனந்த நாகேஸ்வரன் | கோப்புப்படம்

**சென்னை:** உலகளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) இந்தியா 3-வது மிகப்பெரிய நாடாக நடப்பாண்டில் உருவெடுக்கும் என்று தலைமை பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னையில் 'பிக்கி' கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் இதுகுறித்து மேலும் பேசியதாவது:

இந்திய பொருளாதாரம் கடந்த 2014-ல் 10-வது இடத்தில் இருந்த நிலையில் வரும் 2027-ல் 3-வது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மில்லினியம் தொடங்கியதிலிருந்து உலக ஜிடிபியில் இந்தியாவின் பங்களிப்பு 6 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது. இதையடுத்து, நடப்பாண்டில் உலக ஜிடிபியில் இந்தியா 3-வது பெரிய நாடாக உருவெடுக்கும்.

2022-23-ம் நிதியாண்டில் ரியல் ஜிடிபி வளர்ச்சி 7.2சதவீதம் என்ற வலுவான அளவை எட்டியுள்ளது. இறுதி மதிப்பீட்டில் இது இன்னும் அதிகரிக்க கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் வளர்ச்சி நம்பிக்கை தரும் விதத்தில் உள்ளது. இதற்கு, மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி தொடர்ந்து மேற்கொண்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகளே முக்கிய காரணம். அதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டிலும் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 6.5% எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடு பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது.

தனியார் நிறுவனங்களின் முதலீட்டு நடவடிக்கைகள் வேகமெடுத்து வருவதால் வேலைவாய்ப்பும் கணிசமான அளவில் அதிகரிக்கும். இவ்வாறு அனந்த நாகேஸ்வரன் தெரிவித்தார்.

EVA STALIN IAS ACADEMY